1968 பிப்ரவரி 13]

K. S. Ramaswamy, Union Deputy Home Minister received severe injuries, and the people were lathi-charged on the dais where Sri C. Subramaniam, President, Tamilnad Congress Committee, myself and other Congress leaders were standing '."

நாளைக்கு இதனுடைய விளக்கத்தை நான் சொல்ல விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எப்படி இது விதி 50 (viii)-க்குள் வருகிறது, அதாவது சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியம் இல்லை என்பதை விளக்கிச் சொல்லுங்கள்.

அடுத்து திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(ii) கோதையார் நீர் மின்விசைத் திட்டப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து

THIRU J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion :—

" That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely,

' The fire which broke out on 4th February 1968 at the Kodayar Hydro Electric project area in the Kanyakumari district where about 400 houses were destroyed and 25,000 poor people were rendered houseless and incurred a loss of about Rs. 1,50,000 and the need to render urgent relief by this Government '."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தின் காரணமாக அங்கே பலருக்கு இடையூறு களும் இடைஞ்சல்களும் ஏற்படுகிற அளவுக்கு அங்கே சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் தீ விபத்துக்கள் இப்படி ஏற்படுகிற பொழுது எந்த அடிப்படையிலே நாம் நிவாரணம் அளிப்பது என்பது பற்றி சட்டத் தடுப்புகளும் மற்ற முறைகளும் இருக் கின்றன. அதன்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எடுத்துக் கொள்ளுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முறைப்படி அந்தக் காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே, இந்த சபையை ஒத்தி வைத்து அங்குள்ள நிலைமையை விவாதிப்பதன் மூலம் புதிய நிலைமைகள் ஏற்படப் போவது இல்லை. எனவே, இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதிகாரிகளும் முறைப்படி நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிற காரணத்தால் இந்த சபையை ஒத்திவைக்க வேண்டிய தேவை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாதாரண நிர்வாகத் திற்கு உட்பட்ட காரியம் என்பதால் இதற்கு என்னுடைய அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து திரு. கோதண்டராமன் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம்.

* **திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், என் பெயரில் கொடுக்கப்பட்டுள்ள சட்டப் பேரவையின் நடைமுறை விதிகளில் 42-வது விதியின்படி—கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். " மத்திய சர்க்காரின் ரிசர்வ் போலீஸ் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள். இதே காரியத்தைப் பற்றி கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுத்ததைப் படிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் வேறு விதியின்கீழ் வருகிறது. இது ஒற்றி வைப்புத் தீர்மானம் பற்றிய 42-வது விதியின் கீழ் வருகிறது.

(iii) கோவையில் மத்திய அரசு ரிசர்வ் போலீஸ் படையை வைத்தல்

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரின் ரிசர்வு போலீஸ் படையை திடீரென்று கோவையில் கொண்டுவந்து வைத்துள்ளதால் பொதுமக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ள விஷயத்தைப்பற்றி விவாதிக்க இச்சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கோரி, என்னுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிக்கை கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியைத் தருவதற்கு நமது விதி 50 (x)-ன் கீழ் இது எப்படி தமிழக அரசின் பொறுப்பில் தெளிவாக அடங்கியுள்ள காரியம் என்பதைப் பற்றி நீங்கள் கூறுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தமிழக அரசுக்குப் பொதுவான ஒரு விதி, அல்லது மத்திய அரசுக்குப் பொதுவான விதி ஒரு பக்கம் இருந்த போதிலும் இன்றையதினம் கோவையிலே மத்திய சர்க்காருடைய ரிசர்வ் போலீஸ் படையைக் கொண்டு வந்து வைத்திருப்பதனால் அங்கே உள்ள பொதுமக்கள் மத்தியிலேயும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மத்தியிலேயும் பொதுவாக இன்றைக்கு இருக்கிற ஒரு சூழ்நிலையிலேயும் இதைப் பற்றி விவாதிக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக, ஹைதராபாத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய மாநாட்டிலே காங்கிரஸ் அல்லாத சர்க்காரை நடத்தவிடப் போவதில்லை, கவிழ்க்கப் போகின்றோம் என்கிற ஒரு தீர்மானத்தைப் போட்ட பிறகு இந்தப் படையை இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சர்க்காருக்கு ஊனம் ஏற்படுத்துவதற்கு அல்லது இந்தச் சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு அல்லது வேறு பல சூழ்ச்சிகளைச் செய்யக் கூடிய தன்மையிலே இந்தப் படை கொண்டு வந்து வைக்கப்பட்டு இருக்கிறதா என்கிற அளவுக்கு மக்கள் மத்தியிலே ஒரு சலசலப்பு ஏற்படுவது சகஜமே, நியாயமானதே. இதைப் போன்ற நிலைமைகள் இருக்கிற நேரத்தில் இந்த சர்க்கார்